மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்களில் தீத் தடுப்பு நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் சிறப்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. தீ நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் பாதுகாக்க கோடைக்காலம் துவங்கும் முன்னரே காப்புக் காடுகளுடைய எல்லைகளில் தீத் தடுப்புக் கோடுகள் 3 மீட்டர் அகலத்திற்கு வெட்டப்படுகின்றன. அங்கே தீ ஏற்படும் மாதங்களான ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் புதிதாக தீத் தடுப்புக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு, தீ நிகழ்வுகளைத் தடுக்க உபயோகப்படுத்தப்பட்டு வருகிறார்கள் மற்றும் பல்வேறு நீர்த்தேக்க அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஆழ்குழாய்க் கிணறு, கைப் பம்புகள் அமைத்தல், சிமெண்ட் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் கட்டுதல் இப்படிப் பல்வேறு வகைகளில் தீத் தடுப்பு நிகழ்வுகள் நடைபெற்றுகொண்டிருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 460, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

460—

சுரங்கப் பாதை

***6729—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில்வே கேட் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 மே 10]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில்வே கடவு 4–க்கு மாற்றாக சாலை கீழ்ப்பாலம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எங்கள் குலதெய்வம் இருக்கும் இடத்தை நோக்கி மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களில் பணிவான வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.*

என்னுடைய தொகுதியில் கொரட்டூர் பகுதியில் எல்சி–4 தரைப்பாலம் அமைக்க விண்ணப்பித்தேன். பதில் கிடைக்கும் முன்னரே பாலம் அமைக்க உத்தரவு பிறப்பித்த எங்கள் குலதெய்வத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மேலும், இச்சுரங்கப்பாதை பக்கத்தில் பட்டரவாக்கத்தில் அரை கி.மீ. தொலைவில் ஒரு மேம்பாலமும், கொரட்டூர் மற்றும் பாடி பக்கத்தில் ஒரு மேம்பாலமும் உள்ளன.

ஆதலால், தற்போது கொரட்டூர் பகுதியில் அமைக்கப்படுகின்ற மேம்பாலத்தினை, சென்னை மாநகராட்சி விதியின்கீழ் பல்லாவரம், சேத்துப்பட்டு, சைதாப்பேட்டை, விம்கோ நகர் போன்ற பகுதிகளில் அமைந்துள்ள சுரங்கப் பாதைகள் போல் சுரங்கப் பாதையாக அமைக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில் நிலையம் அருகில், கடவு எண் 4-க்கு மாற்றாக ரூ.19.97 கோடி செலவில் சாலை கீழ்ப்பாலம் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அமைக்கப்படவுள்ள கீழ்ப்பாலத்தின் இரயில்வே பகுதியின் பணி இரயில்வே துறையினரால் ரூ.9.68 கோடி மதிப்பில் செயல்படுத்துவதற்கு 9-1-2013 அன்று அங்கீகாரம் வழங்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரயில்வே பணிகள் முடிந்தவுடன் அணுகுசாலை அமைப்பதற்கான பணி நெடுஞ்சாலைத் துறை மூலமாகத் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் கனிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 461, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

461—

பால் பண்ணைக்குப் புதிய கட்டடம்

***8823—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலுள்ள பால் பண்ணைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?